## இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
## வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்
**14 ஆகஸ்ட் 2015 / 29 ஷவ்வால் 1436**

## <u>ஷரீஅத்தின் நூல் வடிவத்திலுள்ள மூலங்களை அறிதல்</u>

الْحَمْدُ للهِ الَّذِي أَحَاطَ بِكُلِّ شَيْءٍ عِلْمًا وَقَضَى بِمَا يُرِيْدُ حِكْمَةً
وَ حُكْمًا، أَنْعَمَ بِالنِعَمِ ابْتِلاَءً وَامْتِحَانًا، وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللّهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه ذُوْ الْجَلاَلِ وَالإِكْرَامْ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا
مُحَمَّدًا عَبْدُه وَرَسُوْلُهُ أَفْضَلُ الأَنَامِ وَ مِصْبَاحُ الظَّلاَمْ، اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَ عَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا
كَثِيْرًا .أَمَّا بَعْدُ فَيَا أَيُّهَا النَّاسُ اتَّقُوْا اللّهَ حَيْثُ مَا كُنْتُمْ، فَإِنَّ اللهَ
يَعْلَمُ سِرَّكُمْ وَ عَلاَنِيَّتَكُمْ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது உச்சகட்டமான பக்தியை ஏற்படுத்திக் கொள்வோமாக! இவ்வுலக வாழ்க்கையில் நாம் செய்த செயல்கள் மற்றும் மொழிந்த வார்த்தைகள் அனைத்தின் விஷயத்திலும் நாம் அல்லாஹ்வினால் மறுமையில் தீர்ப்பளிக்கப்படுவோம் என்பதை நினைவில் கொள்வோமாக!

எனது சகோதரர்களே! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

وَمَن يُطِعِ ٱللَّهَ وَٱلرَّسُولَ فَأُو۟لَٰٓئِكَ مَعَ ٱلَّذِينَ أَنْعَمَ ٱللَّهُ عَلَيْهِم مِّنَ
ٱلنَّبِيِّـۧنَ وَٱلصِّدِّيقِينَ وَٱلشُّهَدَآءِ وَٱلصَّٰلِحِينَ ۚ وَحَسُنَ أُو۟لَٰٓئِكَ
رَفِيقًا ﴿٦٩﴾

பொருள்: எவர்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் வழிப்படுகின்றார்களோ அவர்கள் அல்லாஹ் அருள்செய்த நபிமார்கள், சத்தியவான்கள், சன்மார்க்கப்போரில் உயிர்நீத்த தியாகிகள், நல்லொழுக்கம் உடையவர்கள் ஆகியவர்களுடன் (மறுமையில்) வசிப்பார்கள். இவர்கள்தாம் மிக அழகான தோழர்கள். (அன்னிஸாவு: 69)

மேற்கண்ட வசனம், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா மற்றும் அவனது தூதர்(ஸல்) அவர்களுக்கு அடிபணிந்து நடப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றது. நாம் நேர்மையாகவும், தெளிவாகவும் அடிபணிந்து நடந்து கொண்டால், அதற்கான கூலியாக, இஸ்லாத்தின் தூதர்கள், நம்மில் நேர்மையானவர்கள்(ஸாலிஹீன்கள்), இறை வழியில் உயிர் தியாகம் செய்தவர்கள் (ஷுஹதாக்கள்) போன்ற அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றவர்களுடன் மறுமையில் நாம் ஒன்று சேர்க்கப்படுவோம் எனவும் மேற்கண்ட வசனம் விளக்குகிறது. எனது சகோதரர்களே! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுக்கும், அவனது தூதர்(ஸல்) அவர்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பது என்பதன் பொருள், திருக்குர்ஆனின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு, திரு நபி(ஸல்) அவர்களின் "சுன்னாஹ்" எனும் வழிமுறையை ஆர்வத்துடன் பின்பற்றுவது ஆகும்.

மேலும், திருக்குர்ஆன் மற்றும் "சுன்னாஹ்" வை உறுதியாகப் பற்றிப் பிடிக்க வேண்டும் எனும் கட்டளையின் ஒரு பகுதியாக, அவ்விரண்டையும் முறையாக அறிய முயற்சிக்க வேண்டுமென்பதும் உள்ளது என்பதை மறந்து விடக் கூடாது. திருக்குர்ஆனும் ஹதீதும் பல பகுதிகளில் பதிவு செய்யப்பட்ட புனித நூல்களாக மட்டும் இல்லை. அவ்விரண்டையும்

சரியாக அறிந்து கொள்வதும் அவற்றின் ஒரு பகுதியாக உள்ளது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

அன்பிற்குரிய எனது சகோதரர்களே!

திருக்குர்ஆனையும், திரு நபி(ஸல்) அவர்களின் "சுன்னாஹ்" வையும் பரிபூரணமாக அறிந்து கொள்வது எப்படி? எனும் கேள்வி இங்கு எழுகிறது. தற்காலத்தில் சமூக ஊடகங்கள் அசாதாரணமாக வளர்ந்துள்ள நிலையில், சன்மார்க்கம் சம்பந்தமாக மிகப் பெரிய அளவில் தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படுவதைக் காண்கிறோம். இவ்வாறு பகிர்ந்து கொள்ளப்படும் தகவல்கள் சரியாக இருக்கும் என்பதற்கு உத்திரவாதம் இல்லை. எனவே, திருக்குர்ஆனையும் திரு நபி(ஸல்) அவர்களின் "சுன்னாஹ்" வையும் சரியாகவும், பரிபூரணமாகவும் நாம் விளங்கிக் கொள்வதற்கு உதவியாக இருக்கும் சில எளிய வழிமுறைகளை உங்களுக்கு வழங்குகிறேன்:

**முதன்முதலாக**, திருக்குர்ஆனையும் ஹதீதையும் அவற்றின் அடிப்படை நோக்கங்களைப் புரிந்து, அறிவதாகும்.

"ஷரீஅத்" எவற்றைப் பாதுகாக்க வேண்டுமென்று கூறுகின்றதோ அந்த உயரிய நோக்கங்களைப் புரிந்து கொள்வதன் மூலம் திருக்குர்ஆனையும் திரு நபி(ஸல்) அவர்களின் "சுன்னாஹ்" வையும் அறிவது தான் நமது முதல் முயற்சியாக இருக்க வேண்டும். வாழ்க்கையில் நமது விவகாரங்களை நாம் நிர்வகிக்க முயலும் போது, இஸ்லாமியக் கொள்கைகளின் மையக் கருத்துக்களை நாம் வழிகாட்டியாக அமைத்துக் கொள்ள வேண்டுமெனவும் திருக்குர்ஆனும் "சுன்னாஹ்" வும் நம்மைக் கேட்டுக் கொள்கின்றன. இந்த அடிப்படையில், தனிநபர் மற்றும் சமூக நலப் பாதுகாப்பை அடையுமாறும், அதுவே முக்கிய நோக்கம் எனவும் திருக்குர்ஆனும் "சுன்னாஹ்" வும் கேட்டுக் கொள்கின்றன. இமாம் இப்னு கய்யூம் (ரஹ்) அவர்கள் தனது "இஃலாமுல் முவக்கியீன்" எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்:

"ஷரீஅத்தானது, நீதி, கிருபை மற்றும் பொது நலம் போன்ற மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப்பட்டுள்ளது. எனவே, அநீதம், அழித்து

நாசமாக்குவது போன்றவை ஒருபோதும் ஷரீஅத்தின் பகுதியாக இருக்க வாய்ப்பில்லை"

விஷயம் இவ்வாறிக்க, சிலர், இன்னும் அநீதத்தையும், அழித்து நாசமாக்குவதையும் ஷரீஅத்தின் பகுதி எனக் கருதி வருகிறார்கள்.

இஸ்லாமிய ஷரீஅத்தின் புனித நூல்கள், தனிநபர் மற்றும் சமுதாயத்தின் நலனை எப்போதும் பாதுகாக்க வேண்டுமெனக் கூறுகின்றன. எனவே, நம்மில் சிலரால் வன்முறை மற்றும் கொடுமைகள் நிகழ்த்தப்படுமானால் அவற்றுக்கும் இஸ்லாமிய ஷரீஅத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை அறிய வேண்டும்.

**இரண்டாவது வழிமுறை**, அல்லாஹ்வினால் அருளப்பட்டுள்ள திருக்குர்ஆன் அல்லது "சுன்னாஹ்" கூறும் கருத்துக்களின் பின்னணிகள் மற்றும் அவை கூறப்பட்ட சூழ்நிலைகளை அறிவதாகும்.

திருக்குர்ஆன் மற்றும் "சுன்னாஹ்" கூறும் கருத்துக்களின் பின்னணிகள் மற்றும் அவை கூறப்பட்ட சூழ்நிலைகளை அறிவதன் மூலம் அப்புனித நூல்களின் உண்மையான நோக்கத்தை நாம் அறியலாம். இஸ்லாத்தின் பலவிதக் கல்வியறிவுகளை நாம் ஆய்வு செய்து பார்த்தால், நமது சன்மார்க்க அறிஞர்கள், இஸ்லாத்தின் புனித நூல்களை அறிவதற்கான வழிமுறைகளையும் கொள்கைகளையும் மிகப் சிறப்பாக விளக்கியுள்ளதைக் காணலாம். அவையெல்லாம், முஸ்லிம் சமூகத்தின் வழிகாட்டியாக அமைய வேண்டும். உதாரணமாக, அந்த அறிஞர்கள் "அஸ்பாபுன் நுஜூல்" எனும் கல்வியறிவை உருவாக்கியுள்ளார்கள். இஸ்லாத்தின் இந்தக் கல்வியறிவு, திருக்குர்ஆனின் வசனங்கள் எதன் காரணமாக அருளப்பட்டன, எந்தச் சூழ்நிலைகளில் அருளப்பட்டன என்பதை விளக்குகிறது. அவ்வாறே, இறைத்தூதர்(ஸல்) அவர்களின் "சுன்னாஹ்" வை அறிவதற்கு "அஸ்பாபு உருதுல் ஹதீத்" எனும் கல்வியறிவை ஏற்படுத்தியுள்ளார்கள். இக்கல்வியறிவானது, ஒவ்வொரு ஹதீதுக்கான பின்னணியை விளக்குகிறது.

இவ்விஷயத்தில், மிகச் சிறந்த முன்மாதிரியாக இறைத்தூதர்(ஸல்) அவர்களின் தோழர்களாகிய ஸஹாபாக்கள் உள்ளார்கள். செய்யிதினா

உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள், பல்வேறு விஷயங்களில், தான் செய்த ”இஜ்திஹாத்” (சுய ஆய்வு) அனுபவங்களின் மூலம், இஸ்லாம் விரிந்து, வளைந்து கொடுக்கும் மார்க்கம் எனவும், சர்வதேச மக்கள் அனைவரும் பின்பற்றத் தக்க மார்க்கம் எனவும் நிரூபித்துள்ளார்கள். சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும் நீதத்தை நிலை நாட்ட முடியும் எனவும் நிரூபித்துள்ளார்கள். உதாரணமாக, கலீ:ஃபா உமர் (ரலி) அவர்கள் ”கைப்பற்றப்பட்ட நிலங்களை முஸ்லிம் சிப்பாய்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட மாட்டாது” எனத் தீர்மானித்தார்கள். ஆனால், நிலங்கள் கைப்பற்றப்படும் போது அவற்றை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அவ்வப்போது முஸ்லிம் சிப்பாய்களுக்குப் பகிர்ந்தளித்து வந்தார்கள். இறைத்தூதர்(ஸல்) காலத்தில் அவ்வாறு செய்வதற்கான பின்னணிகளும், சூழ்நிலைகளும் இருந்தன; அவை தற்போது இல்லை என்பதைக் கவனத்தில் கொண்டு கலீ:ஃபா உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு தீர்மானித்தார்கள். மேலும், கைப்பற்றப்படும் நிலங்கள் தொடர்ந்து பகிர்ந்தளிக்கப்படுமானால், எதிர்காலத்தில், எதிர்மறையான விளைவுகள் ஏற்படும் என்பதையும் கவனத்தில் கொண்டு உமர் (ரலி) அவ்வாறு தீர்மானித்தார்கள்.

இவை போன்ற எத்தனையோ உதாரணங்கள், நமது மார்க்கத்தின் புனித நூல்கள் கூறும் கருத்துக்களின் பின்னணிகள் மற்றும் அவை இறக்கப்பட்ட சூழ்நிலைகளை நாம் அறிவதன் முக்கியத்துவத்தை விவரிக்கின்றன. உண்மையில், இவ்வாறு செய்வது, திருக்குர்ஆன் மற்றும் ”சுன்னாஹ்” வை மிகவும் பரிபூரணமாக அறியும் வாய்ப்பை வழங்கும்.

எனது சகோதரர்களே!

**மூன்றாவது மற்றும் இறுதியான வழிமுறை**, திருக்குர்ஆன் மற்றும் ”சுன்னாஹ்” வை சமநிலைச் சிந்தனையை (அல்-வஸதிய்யா) அடிப்படையாகக் கொண்டு விளங்குவதாகும். அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா திருக்குர்ஆனின் ”அல்-பகரா” எனும் அத்தியாயத்தின் 143-வது வசனத்தில் கூறுகின்றான்:

”மேலும், இவ்வாறே (முஸ்லிம்களான) உங்களை நாம் ‘உம்மதன் வஸதன்’ சமநிலையுடைய சமுதாயமாக ஆக்கினோம்; நீங்கள் மக்களுக்குச் சான்று வழங்குபவர்களாயும், இறைத்தூதர் உங்களுக்குச் சான்று வழங்குபவராயும் திகழ்ந்திட வேண்டும் என்பதற்காக!

”வஸதிய்யா” (சமநிலையான, நீதமான) என்பதன் பொருள், நமது சன்மார்க்கக் கடமைகள் விஷயத்தில் நாம் தளர்ந்து விட வேண்டும் என்பதல்ல. மாறாக, இஸ்லாம் ஆர்வமூட்டுகின்ற ”வஸதிய்யா” என்பது தீவிரவாதம், வெறித்தனம் போன்ற தீவிரமான நோக்கங்களுக்குக் காரணமாகாத, நடுநிலையானப் பார்வையாகும். முஸ்லிம் சமூகத்தின் அழிவுக்குக் காரணமாகாத, அதே சமயத்தில் முன்னேற்றத்தின் பால் முஸ்லிம் சமுதாயத்தை அழைத்துச் செல்கின்ற அமைதியான சன்மார்க்கப் புரிந்துணர்வு தான் ”வஸதிய்யா” என்பதன் பொருள் ஆகும். ”வஸதிய்யா” வை அடிப்படையாகக் கொண்ட சிந்தனை, சன்மார்க்கம் சம்பந்தமான எந்த ஒரு தகவலையும் மதிப்பீடு செய்யுமாறு ஒவ்வொரு முஸ்லிமுக்கும் வழிகாட்டும்.

எனது சகோதரர்களே!

கல்வியறிவும் நமது மார்க்கத்தின் ஒரு பகுதி என்பதால், ஒரு உறுதியான இறை நம்பிக்கையானது, நம்பகமான, சரிபார்க்கப்பட்ட சன்மார்க்கக் கல்வியை அடிப்படையாகக் கொண்டிருப்பதும் அவசியமாகும். எனவே, நமது சன்மார்க்கக் கல்வியறிவையும், இஸ்லாம் சம்பந்தமாக நாம் பெறும் தகவல்களையும் சரியானவை தான் என்பதை உறுதி செய்து கொள்வோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் கட்டளைகளுக்குத் தக்கவாறு இஸ்லாத்தை நாம் பின்பற்றுவதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் ”தவ்ஃபீக்” , ”இனாயத்” செய்வானாக! (அருள் புரிந்து, உதவி செய்வானாக!). உயரிய ஒழுக்க மாண்புகளைக் கடைப்பிடிப்பதற்கான வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوْهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.